**செய்தி வெளியீடு எண்: 328** **நாள்: 15.05.2018**

**தேர்வு முடிவுகள் தொடர்பான அறிவுரைகள்**

தமிழகத்தில் 10, 11 மற்றும் 12ம் வகுப்பிற்கான பொதுத் தேர்வுகள் நடத்தப்பட்டு தேர்வு முடிவுகள் இம்மாதம் பல்வேறு தேதிகளில் அறிவிக்கப்பட உள்ளன.

முதல்கட்டமாக, 12ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள் மே 16ஆம் தேதி பொதுத்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட உள்ளது.

மேற்கண்ட மூன்று பொதுத் தேர்வுகளையும் சேர்த்து ஏறத்தாழ 27,72,384 மாணவர்கள் தேர்வெழுதி முடிவுகளுக்காக காத்திருக்கின்றனர்.

தேர்ச்சியடையும் மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்.

அதேநேரத்தில், மதிப்பெண் குறைந்த காரணத்திற்காகவோ அல்லது தேர்வில் தோல்வி அடைந்த காரணத்திற்காகவோ சில மாணவர்கள் தவறான முடிவுகளை மேற்கொள்வதை தடுக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

பொதுத் தேர்வு முடிவுகள் வெளிவந்தவுடன் மனசோர்வுடன் உள்ள மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கு பள்ளி அளவில் தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு மன சோர்விலிருந்து விடுபட்டு தன்னம்பிக்கை பெறுவதற்கான ஆலோசனைகள் (Counselling) வழங்குவது தொடர்பாக அனைத்துத் தலைமையாசிரியர்களுக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

24 மணி நேரமும் செயல்படக்கூடிய உடனடி தகவல் மையம் (Help Line) பள்ளிக் கல்வி இயக்ககத்தில் செயல்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட மாணவர்களோ அல்லது அவர்களது பெற்றோர்களோ இம்மையத்தை 14417 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தகுந்த ஆலோசனைகளைப் பெறலாம். இதற்கென சிறப்பு பயிற்சி பெற்ற மனநல வல்லுநர்கள் இம்மையத்தில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தேர்வு முடிவுகள் வெளிவரும் நாளன்று பெற்றோர்கள் கவனத்துடன் இருந்து மன சோர்வுடன் இருக்கும் மாணவர்களுக்கு தன்னம்பிக்கையையும், உற்சாகத்தையும் அளித்து அரவணைக்க வேண்டியது அவசியமாகும்.

அதேபோல், தன்னுடன் பயிலும் சக மாணவர்களில் எவரேனும் ஒருவர் மதிப்பெண் குறையும் என்ற மன சோர்வில் இருந்தால் சக மாணவர்கள் தன்னம்பிக்கையூட்டி மன சோர்விலிருந்து வெளிக்கொணரவேண்டும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், அனைத்து மாணவர்களுக்கும் நல்ல எதிர்காலத்தை அரசு உருவாக்கி வருகிறது.

எனவே, பெற்றோர்களும், மாணவ கண்மனிகளும், ஆசிரிய பெருந்தகைகளும், ஊடகத் துறையைச் சேர்ந்த அனைத்து நண்பர்களும் சேர்ந்து தேர்வு முடிவுகளை எதிர்கொள்ளும் மாணவ, மாணவியர்கள் அனைவரையும் உற்சாகப்படுத்தும் பணியினை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**கே.ஏ. செங்கோட்டையன்**
**பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**